# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி, மயிலம், திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வுக் கூட்டம் கழக வழக்கறிஞர் ரவீந்திரன் மற்றும் மாநில மாணவரணி அமைப்பாளர் ஜே. வீரமணி ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

24. 5 .2026 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு செஞ்சி வள்ளி அண்ணாமலை திருமண மண்டபத்தில் செஞ்சி சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட செஞ்சி கிழக்கு ஒன்றியம், செஞ்சி மேற்கு ஒன்றியம், செஞ்சி மத்திய ஒன்றியம், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றியம், மேல்மலையனூர் மேற்கு ஒன்றியம், மேல்மலையனூர் மத்திய ஒன்றியம், செஞ்சி மற்றும் அனந்தபுரம் பேரூர் கழகத்திற்கும்

25.5.2026திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு தீவனூர் ஆர். ஆர். மஹால் ஏ.சி. மண்டபத்தில் மயிலம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட வல்லம் வடக்கு ஒன்றியம், வல்லம் தெற்கு ஒன்றியம், வல்லம் மத்திய ஒன்றியம், மயிலம் வடக்கு ஒன்றியம், மயிலம் தெற்கு ஒன்றியம், மயிலம் மத்திய ஒன்றியம், ஒலக்கூர் மேற்கு ஒன்றிய கழகத்திற்கும்

26.5.2026செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு திண்டிவனம், சென்னை சாலையில் உள்ள சங்கமித்ரா கன்வென்ஷன் ஏ.சி. ஹாலில் திண்டிவனம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட ஒலக்கூர்கிழக்கு ஒன்றியம்,மரக்காணம் கிழக்கு ஒன்றியம், மரக்காணம் மேற்கு ஒன்றியம், மரக்காணம் மத்திய ஒன்றியம், திண்டிவனம் நகரம், மரக்காணம் பேரூர்உள்ளிட்ட கழகத்திற்கு கள ஆய்வு நடைபெறுகிறது.

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 23,05,2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

தலைமை: ச.முரசொலி எம்.பி. – தஞ்சை வடக்கு ஒன்றியச் செயலாளர்
செ.உமாராணி – கழக அயலக அணி துணைச் செயலாளர்

| வ. எண் | சட்டமன்ற தொகுதி | நாள் | இடம் |
|---|---|---|---|
| 1 | திருச்செந்தூர் | 24.05.2026 காலை 9 மணி முதல் | IMA ஹால், திருச்செந்தூர் |
| 2 | ஸ்ரீவைகுண்டம் | 25.05.2026 காலை 9 மணி முதல் | பாலாஜி திருமண மண்டபம், பொன்னங்குறிச்சி, ஸ்ரீவைகுண்டம் |
| 3 | ஓட்டப்பிடாரம் | 26.05.2026 காலை 9 மணி முதல் | சத்யா மஹால், புதுக்கோட்டை |

தொகுதி வாரியாக நடைபெறவுள்ள சட்டமன்ற தொகுதி கள ஆய்வு கூட்டத்தில் அந்தந்த தொகுதியில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள் சட்டமன்றத் தொகுதி தேர்தல் பார்வையாளர்கள் தலைமைச் செயற்குழு பொதுக் குழு உறுப்பினர்கள் ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் நிர்வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட அணி அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, வார்டு செயலாளர்கள், கவுன்சிலர்கள் கிளைக் கழக செயலாளர்கள் குறித்த நேரத்தில் அவசியம் பங்கேற்க வேண்டுமாய் கேட்டுக்கொள்கிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் :22.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## முதல்வர் விஜய்யின் பொறுப்பில் மாற்றுத் திறனாளிகள் நலத்துறை!

# ஆழமறிந்து, அவசியமறிந்து செயல்படுங்கள்...!

## கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி,எம்,என்,தீபக் அறிக்கை!

சென்னை, மே 24 -

கழக மாற்றுத்திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் டி.எம்.என். தீபக் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

முதலமைச்சர் ஜோசப் விஜய் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையை தன் வசம் வைத்திருக்கிறார் என்பது அவரது அமைச்சரவை இலாக்கா ஒதுக்கீட்டில் தெரிய வருகிறது!

இந்திய அளவில் மாற்றுத்திறனாளிகளின் உரிமைகள் குறித்து ஐ.நா. உடன்படிக்கையின் அவசியத்தை அரசியல் மற்றும் நிர்வாக ரீதியாக உணர்ந்து அதனை நடைமுறைப்படுத்தும் நோக்கில் செயல்பட்ட தலைவர்களில் முதன்மையானவர் தமிழகத்தின் தலைசிறந்த சிற்பி தலைவர் கலைஞர் அவர்கள்.

மாற்றுத்திறனாளிகள் என்பது வெறும் நலத்திட்டப் பொருள் அல்ல; உரிமை சார்ந்த சமூக நீதி என்பதைக் காலத்துக்கு முன்னரே உணர்ந்த அவர், தமிழகத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கென தனித் துறை உருவாக வேண்டும் என்பதை ஆழமாக புரிந்து கொண்டார். அதை சமூக நலத்துறையில் இருந்து பிரித்தெடுத்து, அதற்கென தனிச்செயலாளரை நியமித்து, அந்தத் துறையைத் தன்னுடைய நேரடி கண்காணிப்பில் வைத்துக் கொண்டார்.

எங்களுடைய தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், அரசு உத்தரவுகளை பார்த்து பார்த்து செய்த்தற்கு காரணம், அதில் ஒரு ஆழமான தத்துவ கருத்துப் புரிதலும், அதற்கேற்ற செயல்பாடும் இருந்ததை இன்றைக்கும் அதை வரவேற்கிறோம் வாழ்த்துகிறோம்.

உடனே எங்கள் மீது விமர்சனம் வைப்பவர்கள், இது நடக்கவில்லையே அது நடக்கவில்லையே என்று விமர்சிக்கக்கூடும். தமிழ் சமூகத்தில் போதாமைகள் இருந்து கொண்டே இருக்கிறது. இந்திய திருநாட்டில். அதையும் கடந்து மாற்றுத்திறனுடையோர் தோழர்களுக்கு வாழ்க்கையில் சில மாற்றங்களை கொண்டு வந்து விட வேண்டும் என்பதை மிகக் குறியாக கொண்டு செயல்பட்டவர் தலைவர் தளபதி அவர்கள்.

"இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த

வகுத்தலும் வல்லது அரசு." — குறள் 385 இத்திருக்குறளுக்கு ஏற்றார் போல் தலைவர் தளபதி அவர்கள், இந்தியாவிலேயே ஒரு மாநிலம் மாற்றுத்திறனாளிகளுக்காக அதிகமாக நிதி ஒதுக்கியது என்றால் அது தமிழ்நாடு தான்.1471 கோடி நிதியும் கொடுத்து மாற்றுத்திறனாளிகளுக்கு அதிகாரத்தையும் கொடுத்தவர் மு.க ஸ்டாலின் ஐயா அவர்கள்.

ஒரு துறையை நிர்வகித்து, பார்த்து நிதானித்து யோசித்து திட்டங்களை உருவாக்கி, மாற்றுத்திறனாளிகளுக்கான பல்வேறு வகையான உதவி உபகரணங்கள், பல்வேறு வகையான சட்டபூர்வமான உரிமைகள் வாரி வழங்கினார். தமிழக மாற்றுத்திறனாளிகள் வரலாற்றில் மாற்றுத்திறனாளிகளுக்கான ஆலோசனைக் குழுவின் வாரிய தலைவராக தானே இருந்து பல்வேறு வகையான மாற்றுத் திறனாளிகளை நியமித்து அவர்களை நேரடியாக தலைமைச் செயலகத்திற்கு அழைத்து கூட்டம் நடத்தி, அந்த கூட்டத்திற்கு தானே தலைமை வகித்தவர். இது வரை எந்த முதலமைச்சரும் செய்யாததை செய்து காட்டியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் வழி வந்த மு.க ஸ்டாலின் ஐயா அவர்கள்.

இன்றைக்கு இந்த துறையை திரு. ஜோசப் விஜய் அவர்கள் தன் வசம் வைத்திருப்பது மகிழ்ச்சி தான், ஆனால் அத்துறையின் ஆழமான கருத்தியல்கள் தெரிந்து கொண்டு, அது அவ்வளவு எளிதான விஷயம் இல்லை என்பதை புரிந்து கொண்டு அதற்குத் தேவைப்படுகின்ற கவனத்தை நம்மால் கொடுக்க இயலுமா என்பதை உணர்ந்து புரிந்து அறிந்து அத்துரையை அவர் கையில் வைத்திருந்தால் சரி!

அதைவிடுத்து ஏனோ தானோ என்று சரியான புரிதல்கள் இல்லாமல் அந்தத் துறையை கைவசம் வைத்து விட்டு மாற்றுத்திறனாளிகள் பிரச்சனையில் உரிய கவனத்தை செலுத்தவில்லை எனில் திராவிட முன்னேற்றக் கழகம் சரியான பாதையில் அதற்கான விமர்சனத்தை வைப்பதற்கு ஒருபோதும் தயங்காது என்பதை இந்த நேரத்தில் இந்த புதிய அரசுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

யார் மாற்றுத்திறனாளி பிறவியில் உடம்பில் பழுது ஏற்பட்டவர் மாற்றுத்திறனாளியா? சூழ்நிலை காரணமாக ஒரு இயலாமையை தன் வாழ்க்கையில் சந்திப்பவர் மாற்றுத்திறனாளியா? சூழ்நிலைதான் இயலாமையை உருவாக்குகிறது என்பதை புரிந்து கொள்ளாமல் இருப்பவர் மாற்றுத்திறனாளியா இப்படி அநேகமான கேள்விகள்.

ஒரு மாற்றுத்திறனாளியே அந்த துறையினுடைய அமைச்சராக இருக்க வேண்டும். பெற்றிருக்கின்ற சட்ட உரிமைகள் எல்லாம் நிதர்சனமாக, கடைகோடி மாற்றுத்திறனாளிகளுக்கு சென்று சேர வேண்டும் என்றால் அரசியல் அதிகாரம் இருக்க வேண்டும் என்று ஐநா சபை மிகத் தெளிவாக வழி வகுத்திருக்கிறது. எங்களுக்கான எதுவும் நாங்கள் இல்லாமல் இருக்கக் கூடாது என்பதை காலம் காலமாக மாற்றுத்திறனாளிகள் சமூகம் கோரிக்கையாக முன்வைத்துக் கொண்டே இருக்கிறது.

மாற்றுத்திறனாளிகளுக்கான ஆணையத்தை அமைத்து, அவர்களுக்கு தேவையான நிதி, நீதி, அணுகுமுறையை இதுவரை திமுக அரசு வழங்கி வந்தது. இனியும் மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் முழுமையாக அணுகத்தக்க மற்றும் உரிமை சார்ந்த ஆட்சியாக அமைய வேண்டும்.

மேலும், ஆலோசனைக் குழு மற்றும் நல வாரியம் போன்ற இடங்களில் நேரடியாக தலைமை ஏற்று, மாற்றுத்திறனாளிகளின் கருத்துகளையும் உரிமை கோரிக்கைகளையும் கேட்டறிந்து செயல்பட வேண்டும்.

மாற்றுத்திறனாளிகளுக்கான இடஒதுக்கீடு மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிப்பதோடு, தனியார் துறைகளிலும் அவர்களுக்கு உரிய வேலைவாய்ப்புகளை உறுதிப்படுத்த தீவிர முயற்சி எடுக்க வேண்டும்.

தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கான பணி நிரந்தரம், உதவித் தொகை உள்ளிட்ட வாக்குறுதிகள் நடைமுறைப்படுத்தப்பட்டு, அது உண்மையான உரிமை சார்ந்த அரசாக வெளிப்பட வேண்டும். மேலும், மாற்றுத்திறனாளிகளுக்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுக்கும் சட்டங்கள் இன்னும் கடுமையாக்கப்பட்டு, பாதுகாப்பும் நீதியும் உறுதி செய்யப்பட வேண்டும்.

அவர்கள் இருக்கக்கூடிய இடங்களிலெல்லாம் அவர்களின் குரல் ஒலிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில், தளபதி முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளில் மாற்றுத்திறனாளிகளுக்கான பிரதி நிதித்துவத்தை உருவாக்கியுள்ளார். அதன் அடிப்படையில் நகர்ப்புற உள்ளாட்சிகளில் நியமனங்கள் முதற்கட்டமாக கடந்த ஆட்சியில் வழங்கப்பட்டுள்ளன. கிராமப்புற உள்ளாட்சிகளில் நியமனங்கள் விரைவில் நிரப்பப்பட வேண்டும்.

ஒரு துறையை எடுத்தோம் அறிக்கையை விட்டோம், ஏதோ ஒரு திட்டத்தை செயல்படுத்தினோம் என்றில்லாமல், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிறுத்திய மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியல் வலிகள், உரிமைகள், தேவைகள் மற்றும் உள்ளத்தின் உணர்வுகளை ஆழமாக புரிந்து கொண்டு, இன்றைய புது அரசு செயல்பட வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## ஏ.ஆர்.ராஜா முன்னிலை! குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில்

# வாக்காளர்களுக்கு நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. நன்றி தெரிவித்தார்!

மயிலாடுதுறை, மே 24 -

மயிலாடுதுறை மாவட்டம்,பூம்புகார் சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மயிலாடுதுறை மாவட்ட செயலாளர் நிவேதா எம். முருகன் தனது பூம்புகார் தொகுதி குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில் வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார்.

மயிலாடுதுறை மாவட்டம் பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன் கழகத் தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க குத்தாலம் மேற்கு ஒன்றியத்தில் எழுமகளூர், கங்காதாராபுரம், மாந்தை, நத்தம்பாடி, பருத்துக்குடி, ஆகிய ஊராட்சிகளில் வாக்காளர்களுக்கு நேரில் சென்று நன்றி தெரிவித்தார்.

பூம்புகார் தொகுதியில் குத்தாலம் மேற்கு ஒன்றியத்துக்கு உட்பட்ட எழுமகளூர் ,கங்காதரபுரம், ஸ்ரீகண்டபுரம், நக்கம்பாடி, மாந்தை, கோனேரிராஜபுரம், பருத்திக்குடி, கோனேரிராஜபுரம், சிவனாபுரம், கோடி மங்களம். காஞ்சிவாய், பாலையூர் ஊராட்சிகளில் குத்தாலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் ஏ.ஆர்.ராஜா முன்னிலையில் திறந்த வெளி வாகனத்தில் சென்று வாக்களித்த மக்களுக்கு நன்றியை தெரிவித்தார்.

வழிநெடுகிலும் திரண்டிருந்த பொதுமக்கள், பெண்கள் வழி நெடுகிலும் பட்டாசு வெடித்தும், மாலை மற்றும் சால்வை அணிவித்தும், ஆரத்தி எடுத்தும் உற்சாகமான வரவேற்பு அளித்தனர்.

இந்த நன்றி தெரிவிப்பு நிகழ்ச்சியில் குத்தாலம் ஒன்றிய குரு முன்னாள் தலைவர் மகேந்திரன், முன்னாள் ஒன்றியக் குழு உறுப்பினர் டாக்டர் சிவக்குமார், ஒன்றிய துணை செயலாளர்கள் முருகன், காசிராஜன், வரதராஜன், மாவட்ட பிரதிநிதி ராஜசேகரன், இளைஞர் அணி அமைப்பாளர் கார்த்திகேயன், தகவல் தொழில் நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் எம்.சி. சரவணன் மற்றும் கிளை கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், கழகத்தினர் உள்ளிட்ட ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க. விவசாயத் தொழிலாளர் அணி இன்று

# மாநில நிர்வாகிகள் கூட்டம்!

## தி.மு.க, விவசாயத் தொழிலாளர் அணிச் செயலாளர் அன்னியூர் சிவா அறிவிப்பு!

இன்று (ஞாயிற்றுக்கிழமை – 24ஆம் தேதி) மாலை 3.40 மணியளவில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் விவசாய தொழிலாளர் அணியின் மாநில நிர்வாகிகள் கூட்டம் தமிழினத் தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய பிறந்த நாள் விழாவினை சிறப்பாக கொண்டாடப்படுவதை முன்னிட்டு காணொளி காட்சி மூலம் ஆலோசனைக் கூட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை- 600 018.
நாள்: 22.05.2026.

**அன்னியூர் சிவா**
செயலாளர்
தி.மு.க. விவசாய தொழிலாளர் அணி

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### குட்டப்பாளையம் மிசா கே.என்.சாமிநாதன்
### மே 24 (1986)



கொங்கு சீமையில் பாரம்பரியமிக்க செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்தவர் எனினும், சுயமரியாதை இயக்கத்தில் ஈடுபாடு கொண்டு, திராவிடர் கழகத்தில் பணியாற்றி, கழகம் துவங்கியபோது தன்னையும் அதில் இணைத்துக் கொண்டு, கழகச் செயல் வீரர்களுடன் கொங்கு மண்டலத்தின் பட்டிதொட்டிகளுக்கெல்லாம் சென்று, பாமரனும் புரியும்படி நகைச்சுவையாக பேசி கழக கொள்கைகளை பரப்பியவர்.

1967ல் வெள்ளகோவில் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு, வெற்றி பெற்றார்.

பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, கால்நடை அபிவிருத்தி குழு உதவி தலைவராகவும் – தமிழ்நாடு தானிய சேமிப்பு கிடங்கு இயக்குநராகவும் – ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் – தாராபுரம் குளத்துப்பாளையம் கூட்டுறவு நூற்பு ஆலை தலைமை பொறுப்பு போன்ற பொறுப்பு வகித்து திறம்பட பணியாற்றியவர்.

நெருக்கடிகால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு கோவையில் சிறைவாசம் அனுபவித்தவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் "கொங்கு நாட்டில் தலைதாழச் சிங்கமாக, தன்மான முரசாக தமிழ் இனத்துச் சுடரொளியாக வாழ்ந்த குட்டைப்பாளையத்தார்" என தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### மயிலை நா. சம்பந்தன்
### மே 24 (1998)



சென்னை மாவட்டம், மயிலைப் பகுதிக் கழகச் செயலாளராக மூன்று முறையும் – மாவட்டக் கழகத் துணைச் செயலாளர் – தலைமைச் செயற்குழு உறுப்பினர் என பல பொறுப்புகள் வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர் – மண்டலக்குழுத் தலைவர் மற்றும் மயிலை இந்து சாசுவத நிதி நிறுவனத்தில் இயக்குநராக மூன்று முறையும் தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

மிசா சட்டத்தின்கீழ் சிறைவாசம் – இந்தி எதிர்ப்பு – இலங்கைத் தமிழர் பாதுகாப்பு உள்ளிட்ட கழகம் அறிவித்த அறப்போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**